**செய்தி வெளியீடு எண்: 213** **நாள்: 27.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.3.2018) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் வட்டாரம், சமுத்திரத்தில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை**

---

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு, சுருக்கமாக பேசினாலும், விளக்கமாக பேசி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே,

வரவேற்புரை நிகழ்த்திய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே,

எடப்பாடி சட்டமன்ற தொகுதியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ராஜா அவர்களே,

கெங்கவள்ளி சட்டப்பேரவை உறுப்பினர் வழக்கறிஞர் திரு.மருதமுத்து அவர்களே,

ஆத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சின்னத்தம்பி அவர்களே,

ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெற்றிவேல் அவர்களே,

வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி மனோன்மணி அவர்களே மற்றும்

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் திரு. மணி அவர்களே,

ஒன்றிய கழகத்தினுடைய செயலாளர் முன்னாள் மாவட்ட ஊராட்சிமன்ற உறுப்பினர் திரு.ராஜேந்திரன் அவர்களே,

இந்த பகுதியை சேர்ந்த முன்னாள் கவுன்சிலர் – கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.மாணிக்கம் அவர்களே மற்றும்

இந்த விழா மேடையிலே வீற்றிருக்கின்ற அரசு அதிகாரிகளே, மருத்துவத் துறையை சேர்ந்த அதிகாரிகள் வருவாய்த் துறையை சேர்ந்த அலுவலர்களே, சுகாதாரத் துறையை சேர்ந்த அலுவலர்களே, மருத்துவர்களே, வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, விவசாய பெருங்குடி மக்களே, கழகத்தினுடைய பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிர்வாகிகளே, கழக உடன்பிறப்புகளே அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,

இந்த சமுத்திரம் பகுதி பக்கத்தில் புதுப்பாளையம், கோணசமுத்திரம், கோவணம்பட்டி, அருகாமையிலே இருக்கிற வெள்ளாடபுரம் இவை அனைத்துமே எனக்கு நன்கு தெரிந்த பகுதி. பல ஆண்டு காலமாக உங்களுடைய மகத்தான ஆதரவின் பேரிலே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆசியிலே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றினேன். அதேபோல இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2001–லிருந்து 2016 வரைக்கும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக பதவி வழங்கினார். அதன்மூலமாக, நெடுஞ்சாலைத் துறைக்கு சம்பந்தப்பட்ட எல்லா சாலைகளையுமே சிறப்பான சாலைகளாக நம்முடைய பகுதியிலே உருவாக்கித் தந்திருக்கின்றோம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியிலே அம்மாவினுடைய அரசு செயல்பட்டு குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை துவக்கி, ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல்மண்ணை விவசாயிகளே அள்ளி அவர்களுடைய நிலத்திற்கு உரமாக பயன்படுத்தக்கூடிய திட்டத்தை அறிவித்து, அதன் மூலமாக, முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 1519 ஏரிகள் தூர்வாரப்பட்டு, இன்றைக்கு நிலத்தடி நீர் உயர்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு சமுத்திரம் பகுதி பக்கத்தில் புதுப்பாளையம், கோணசமுத்திரம், கோவணம்பட்டி, மற்றும் கச்சுப்புள்ளி இந்த சுற்றுவட்டாரக் பகுதிகளையெல்லாம் பார்க்கின்றபொழுது, வறட்சியால் நிறைந்த பகுதி. நிலத்தடி நீர் நாளுக்கு நாள் வற்றிக் கொண்டிருக்கின்றன, 1000 அடிபோட்டால் கூட bore-ல் தண்ணீர் கிடைக்காத சூழ்நிலையில் இருக்கின்ற பகுதிக்கெல்லாம் நிலத்தடி நீரை உயர்த்தவேண்டும், அதற்காக குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை உருவாக்கி அதன் மூலமாக பருவமழை காரணமாக பெய்கின்ற மழைநீர் குளத்திலே, ஏரியிலே தேக்கப்படுவதால், நிலத்தடி நீர் உயருவதால் மக்களுக்கு தேவையான குடிநீர் கிடைக்கின்றது, நிலத்தடி நீர் உயர்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி விவசாய பெருமக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது, குடிப்பதற்கான நீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. இரண்டாம் திட்டப் பணிக்காக அம்மாவினுடைய அரசு இந்த ஆண்டு 331 கோடி ரூபாய் ஏரிகளை ஆழப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே வாழ்கின்ற மக்களுக்கு

ஆங்காங்கே இருக்கின்ற ஓடைகள், நதிகள் குறுக்கே தடுப்பணைகள் கட்டி, அதன் மூலமாக பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் அங்கேயே தேக்கவைக்கப்பட்டு, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் மற்றும் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக மூன்றாண்டு திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, முதல் கட்டமாக அந்தப் பணியை துவங்க இருக்கின்றோம். நீர் மேலாண்மை மிக முக்கியம், ஏனென்றால் மழை குறைவாக பெய்கின்றது, பெய்கின்ற மழைநீரை சரியான முறையில் தேக்கி வைத்து நிலத்தடி நீரை உயர்த்துவது அரசிந்ன கடமை. அதற்காக அம்மாவினுடைய அரசு முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. எங்களுடைய பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று குறிப்பிட்டீர்கள். ஆகவே, உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக இன்றைக்கு உங்களுடைய பகுதியிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை இன்றைக்கு திறந்து வைத்திருக்கின்றோம். இதனால், சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற சுமார் 20000 பொதுமக்கள் பயன்பெறுவார்கள். உழைக்கின்ற மக்கள் வெகுதூரம் சென்று சிகிச்சை செய்யமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றதையெல்லாம் கருத்தில் கொண்டு உங்கள் பகுதியிலேயே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்குகின்றபொழுது, அருகாமையில் இருக்கின்ற சமுத்திரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து பரிசோதனை செய்து சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில்தான் அதிக அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவங்கப்பட்டிருக்கின்றது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு முறையான சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை கிராமப்புறத்திலே துவக்கி அதன் மூலமாக ஏழை மக்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அங்கே இருக்கின்ற மக்கள், இந்த சொசைட்டிக்கு பின்னாலே நிலம் இருக்கிறது, அங்கேயே ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள், அதுவும் நிறைவேற்றித் தரப்படும். இங்கே ஒரு ஏக்கர் நிலம் எடுத்து, கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருமையான சுகாதார நிலையம் கட்டிக் கொடுத்து, உங்களுடைய தேவைகளை அம்மாவினுடைய அரசு பூர்த்தி செய்யும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்களை அம்மாவினுடைய அரசு அறிவித்து வருகின்றது. நம்முடைய தொகுதியை பொறுத்தவரைக்கும், விவசாயம், விசைத்தறி, கைத்தறி

இந்த மூன்றுதான் பிரதான தொழிலாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபொழுதே, விசைத்தறிக்கும், கைத்தறிக்கும் மானிய விலையில் மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்தியாவிலேயே எந்தவொரு மாநிலத்திலும் மானிய விலையில் விலையில்லா மின்சாரம் கொடுக்கின்ற மாநிலம் கிடையாது. தமிழகத்தில்தான் விசைத்தறி மற்றும் தொழிலாளர்களுக்கும், உரிமையாளர்களுக்கும் விலையில்லா மின்சாரம் கொடுக்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான், வேறு எங்கும் கிடையாது. அதுமட்டுமல்லாமல் அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக தந்து கொண்டிருக்கின்றோம். வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இதுபோன்ற திட்டத்தை அமல்படுத்தவில்லை. ஏழை, எளிய மக்களுடைய நிலையை புரிந்துகொண்டு, அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து, அந்த தேவையை பூர்த்தி செய்து, அவர்களை வாழவைக்கும் அரசு அம்மாவினுடைய அரசு.

அம்மாவினுடைய அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி, மக்களுக்கு தேவையான நலன்களை செய்துகொண்டிருக்கின்றது. இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் பெண்களுக்கான திருமண உதவித் திட்டம், இன்றைக்கு ரூபாய் 27 ஆயிரம், ரூபாய் 50 ஆயிரம், 1 பவுன் தங்கம் அம்மாவினுடைய அரசு தந்து கொண்டிருக்கின்றது. கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ரூபாய் 6 ஆயிரம் கொடுக்கப்பட்டதை, அம்மா அவர்கள் ரூபாய் 12 ஆயிரமாக உயர்த்தி, பின்னர் அதை ரூபாய் 18 ஆயிரமாக உயர்த்தி, அதில் ரூபாய் 4 ஆயிரத்திற்கு 16 வகையான பொருட்களை உள்ளடக்கி அம்மா தாய், சேய் நலப் பெட்டகம் என்று ஏழை தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளுக்காக இரண்டு உறை, 12வது வாரம், 16வது வாரத்தில் கொடுக்கின்றோம். குழந்தைகள் பிறக்கும்பொழுது எல்லாவிதத்திலும் சரியாக இருக்கின்றது, ஆனால் எடையில் மட்டும் குறைபாடு இருக்கின்றது, அந்த குறைபாட்டையும் தீர்க்க வேண்டுமென்பதற்காக 12வது, 16வது வாரத்தில் சத்தான பொருட்கள் கொடுப்பதற்காக, 16 வகையான பொருட்களை உள்ளடக்கி அம்மா தாய், சேய் நலப் பெட்டகம் என்று பெயரிட்டு ஏப்ரல் 1–ம் தேதியிலிருந்து வழங்கவிருக்கின்றோம். குழந்தைகள் பிறக்கும்பொழுதே நல்ல எடையுடன் பிறந்தால்தான் நோய்நொடியில்லாமல் இருக்க முடியும். ஏழைத் தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகள் 16 வகையான பொருட்களை உள்ளடக்கிய இந்த பரிசு பெட்டகத்தை பெறுகின்றது, இந்தியாவிலேயே இந்த திட்டம் எங்கேயும் கிடையாது, அம்மாவினுடைய அரசு தான் வழங்குகின்றது.

அம்மாவினுடைய ஆட்சியில் தான் நிறைய திட்டங்களை கொடுத்திருக்கின்றோம். விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கி விவசாய பெருங்குடி மக்களுக்கு பல்வேறு நன்மைகளை செய்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி நான் இந்த சமுத்திரத்திற்கு முதலமைச்சராக வந்து, ஆரம்ப சுகாதார நிலையத்தை திறப்பதற்குண்டான ஒரு பாக்கியத்தை நீங்கள் எனக்கு தந்திருக்கின்றீர்கள்.

நான் 1989–ல் சேவல் சின்னத்தில் போட்டியிட்டபோது நல் ஆதரவை கொடுத்து சட்டமன்ற உறுப்பினராக எனக்கு ஒரு முகவரியை தந்தீர்கள். அதற்குப் பிறகு 1991–ல் சட்டமன்ற உறுப்பினர் ஆனேன். நாடாளுமன்ற உறுப்பினர் ஆனேன். அதற்குப் பிறகு 2011–ல் உங்களுடைய மகத்தான ஆதரவினால் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தலைமையில் இருந்த அமைச்சரவையிலே நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தேன். நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக 2011–ல் நான் அமைச்சராக வந்தேன். 2014–ல் நான் சிறப்பான முறையிலே பணியாற்றியதன் காரணமாக கூடுதலாக பொதுப்பணித்துறை அதையும் அம்மா கொடுத்து, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை இரண்டு துறையையும் கொடுத்து, அம்மா அமைச்சரவையிலே என்னை இடம்பெறச் செய்தார். மாண்புமிகு அம்மாவிற்குப் மறைவிற்குப் பிறகு, அனைத்து பொதுமக்களுடைய நல் ஆதரவு, சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய நல் ஆதரவு, கழக அனைத்து முக்கிய நிர்வாகிகளுடைய பேராதரவோடு இன்றைக்கு தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்று, இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்றோம். எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் இருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர், இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பெருமை அனைத்தும் உங்களையே சாரும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனென்றால், 234 தொகுதிகள் இருக்கின்றன, 234 தொகுதியில் எடப்பாடி தொகுதிக்கு முதலமைச்சர் பொறுப்பு கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அது உங்களால் கிடைத்திருக்கின்றது, அந்தப் பெருமை முழுவதும் உங்களையே சாரும் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் தேவையான உதவிகளை அம்மாவினுடைய அரசு கவனமாக இருந்து செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் எம்.எல்.ஏ.–வாக இருக்கும்பொழுது அடிக்கடி வரமுடியும், அமைச்சராக இருக்கும்பொழுது கிட்டத்தட்ட இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இருந்தேன். இப்பொழுது 234 தொகுதிக்கும் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலே அடிக்கடி வரமுடியவில்லை,

அதுதான் ஒரு குறை, வேறு எந்த குறையும் கிடையாது. முதலமைச்சருக்கு நாள்தோறும் பல்வேறு பணிகள் இருக்கின்றன. 234 தொகுதியில் இருக்கின்ற பொது மக்களுக்கு தேவையான திட்டங்களை கொடுப்பது, அங்கு இருக்கின்ற பிரச்சினையை தீர்க்கக்கூடிய ஒரு நிலையில் இருக்கின்ற காரணத்தினாலே அடிக்கடி வரமுடியவில்லை, இருந்தாலும் நீங்கள் கொடுக்கின்ற மனு முழுவதும் கம்ப்யூட்டரில் பதிவு செய்து, இங்கே இருக்கின்ற கழக நிர்வாகிகளைஅவ்வப்போது அழைத்து பேசி அதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து இன்றைக்கு உருவாக்கி தந்து கொண்டிருக்கின்றோம். ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று தேர்தல் நேரத்திலே கேட்டீர்கள். அது இப்பொழுது திறந்து வைக்கப்பட்டு விட்டது. ஆகவே, ஒவ்வொரு திட்டமாக உங்களுக்கு வழங்குவேன். என்றென்றைக்கும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசுக்கு துணை நிற்கவேண்டும். உங்களோடு ஒருவனாக நான் எப்பொழுதும் இருப்பேன், முதலமைச்சர் என்ற நிலை கிடையாது, உங்களால் எனக்குக் கிடைத்த பெருமை இந்த முதலமைச்சர் பதவி என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, நீங்கள் எப்பொழுதும் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசிற்கு நல் ஆதரவு நல்க வேண்டும். இங்கே பெரும்பாலானோரை நேரடியாக எனக்குத் தெரியும். பல ஆண்டுகாலம் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றி, இந்தப் பகுதி முழுவதையும் நன்கு அறிந்தவர். எந்த பகுதியில் என்ன ஊர் என்று தெரியும், எல்லா சாலைகளும் தெரியும், எந்தெந்த பகுதியில் என்னென்ன பிரச்சினைகள் என்பது நன்றாகத் தெரியும். அதெல்லாம் யார் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் நான் செய்து கொண்டே இருப்பேன். அத்தனையையும் நீங்கள் கொடுக்கின்ற அத்தனை மனுக்களையும் கம்ப்யூட்டரில் பதிவு செய்திருக்கிறேன். அவ்வப்போது தீர்வு காணப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, என்றென்றைக்கும் உங்களோடு நான் இருப்பேன், உங்களுடைய தேவைகளை நிச்சயம் பூர்த்தி செய்வேன் என்பதைச் சொல்லி, மாண்புமிகு அம்மாவினுடைய கனவை நிறைவேற்றுகின்ற அரசாக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்டி, சிறப்பான வரவேற்பு நல்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், சிறப்பான நிகழ்ச்சியிலே பங்குபெற்ற பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், கழக முன்னோடி நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**